**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 215/2023

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமியண்ணன் | கணவர் பெயர் | : ------ |
| தகப்பனார் பெயர் | மோளையக்கவுண்டர் | வயது | : 80 |
| கிராமம் | கூத்தனூர் | நாள் | : 09.04.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 05.04.1945 தேதியில் என் தந்தை மோளையன் (எ) நல்லப்பன் என்பவர் கந்தசாமி மற்றும் பச்சமுத்து ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 07.03.2000 தேதியில் என் பெயரிலுள்ள பாகக்கூர் சீட்டு அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. என் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 20) அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 21.02.2022 தேதியிட்ட என் பெயரிலுள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. என் பெயரிலுள்ள மின் மீட்டர் அட்டை அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. மாண்பமை பிரதம மத்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் எனக்கு வீடு கட்ட வழங்கிய உத்தரவு நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. தாவா சொத்தின் புகைப்படங்கள் (எண்ணிக்கை 3) கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.